REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 1௳ சனி (15—6—57) ★ ★ வெளியீடு: ஆனி 2௳ ஞாயிறு (16—6—57) [இதழ் 1

6,423 இரயில் நிலையங்கள்!

புதுடில்லி, ஜூன் 14—

இந்தியாவெங்கணுமாக உள்ள இரயில்வே நிலையங்களின் எண்ணிக்கை 1957 மார்ச் 31-ந் தேதிவரை 6423 என்றும், இது 1956 மார்ச் 31-ல் 6373 ஆக இருந்தது என்றும் ஓராண்டில் 50 புதிய இரயில் நிலையங்களே திறக்கப்பட்டன என்றும் கணக்கு தரப்பட்டிருக்கிறது. இவற்றில் தென்பிராந்திய இரயில்வேயில் திறக்கப்பட்டவை 14 இரயில் நிலயங்களே என்றும் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் திட்டத்தில் தமிழகத்தின் பங்கு:

சென்னை சர்க்காரின் முயற்சி மீண்டும் தோல்வி

ரூ. 2 கோடி அதிகம் தரவும் டில்லி மறுப்பு

புதுடில்லி, ஜூன் 13—

இரண்டாம் திட்டத்தில் சென்னையின் பங்கு, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதைபோல, ரூ. 200 கோடியிலிருந்து ரூ. 152 கோடியாகச் சுருங்கிவிட்டதைச் சுட்டிக்காட்டி, திட்டக் குழுவிடம் ரூ. 2 கோடியாவது அதிகரித்துத் தரவேண்டுமென சென்னை சர்க்கார் மன்றாடினர்களாம்!

ஆனால் வழக்கம்போல டெல்லி, சென்னையின் வேண்டுகோளுக்கு, 'கிடையாது—முடியாது' என்றே பதில் தந்தார்களாம்.

"மாநில புது அமைப்பிற்குப் பிறகு அமைந்த சென்னை மாநிலத்திற்கு நியாயமாக, ரூ. 182 கோடிவரை கிடைக்க வேண்டும்; ஆனால் ரூ. 152·27 கோடிதான் கிடைத்திருக்கிறது; எனவே கூட்டித் தாருங்கள்"

என்று வாதிடும், சென்னை சர்க்காருக்கு மூக்குடைந்ததுதான் மிச்சமாம்!

"கேரளம் அமைந்தபோது, மலபார் அங்கு சென்றது. அதற்காக, சென்னையின் திட்டத்தில் ரூ. 18·95 கோடி குறைத்துக் கொள்ளச் சொன்னர்கள்; ஆனால் இது திட்டக் குழுவின் திட்ட நிர்வாக ஆலோசகர் தந்த சிபாரிசைவிட ரூ. 2 கோடி அதிகம். அப்படி அதிகமாக கேரளத்திற்குத் தந்துவிட்டதால் எங்களுக்கு இப்போது ரூ. 152·27 கோடி பெறுமான திட்டமே இருக்கிறது. எனவே, கேரளத்திற்கு விட்டுக்கொடுத்த ரூ. 2 கோடி அளவுக்கேனும் திட்டத்தை விரிவாக்கித் தாருங்கள்"

என்று திட்டக் குழுவிடம் சென்னை சர்க்கார் கெஞ்சினர்களாம்! பலன் என்னவோ பூஜ்யம்தானம்!

என்றாலும் மீண்டும் இப்போது காவடி எடுத்திருக்கிறார்களாம் டெல்லிக்கு!

கேட்டதோ ரூ. 2 கோடி!

கிடைப்பதோ அரை கோடிக்கும் குறைவு

சென்னை, ஜூன் 14—

குடிதண்ணீர் சப்ளை, மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்காக சுமார் 2 கோடி வரை உதவுமாறு டெல்லி சர்க்காரை சென்னை நகரசபை கேட்டிருந்தது. ஆனால், அந்தத் திட்டங்களில் சிலவற்றிற்காக மட்டும், ரூ. 44,68,000 மானியம் வழங்க டெல்லிக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதாம்.

கடன் வழங்குவது பற்றி பின்னர் யோசிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

எல்லைத் தகராறு

படாஸ்கரின் தீர்ப்பு? இப்போது இல்லையாம்

ஐதராபாத், ஜூன் 14—

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி ஆந்திர தமிழக எல்லைத் தகராறுக்கான படாஸ்கரின் தீர்ப்பு நேற்று வெளிவரவில்லை.

இந்தத் தீர்ப்பு வெளிவருவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படக்கூடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

காரணம் படாஸ்கர் மீண்டும் தகராறு பற்றிய சில விபரங்களை ஆந்திர சர்க்காரிடமிருந்து கேட்டிருக்கிறாராம்.

'பென்ஷன்' விதிகள் தாராளமாகின்றன?

புதுடில்லி, ஜூன் 12—

பென்ஷன், மரணம் - உபகார உதவி நிதி, குடும்பப் பென்ஷன் ஆகிய விஷயங்களில் பின்பற்றப்படும் விதிகளைத் தளர்த்தி தாராளமாக்குவதென மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்.

இந்த விதிகள் 1956 ஏப்ரல் 17-ந் தேதி முதல் அமுல் செய்யப்படுமாம்.

இனி 20 ஆண்டுகள் உழைத்தால் (தற்போது 25 ஆண்டுகள் என்ற விதி உள்ளது.) குடும்பப் பென்ஷனுக்கு தகுதி அம்சமாகும்.

குறைந்தபட்ச குடும்பப் பென்ஷன் ரூ. 30 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

60 கோடி டாலர்கள் உதவி

திட்டத்திற்காக வேண்டுமென மேலை நாடுகளிடம் நேரு கேட்பாராம்!

லண்டன், ஜூன் 14—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு இந்தியாவினல் முடியுமா என்பதும், காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டின் முக்கிய பரிசீலனைகளுள் ஒன்றாக இருக்குமாம்.

பண்டித நேரு, தான் மேற்கொண்டிருக்கும் மேலை நாட்டுச் சுற்றுப் பயணத்தின்போது, தனது திட்டத்திற்கு நிதி உதவி பெறுவதையும் பிரதான வேலையாகக் கருதுவாராம்!

சுமார் 60 கோடி டாலர் வரை பிரிட்டனே, அமெரிக்காவோ திட்டத்திற்காக உதவவேண்டியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

திட்டத்தின் வெற்றி தோல்விகள், ஆசியாவில் ஜனநாயகத்திற்குள்ள செல்வாக்கையும், கௌரவத்தையும் பாதிக்கக் கூடியதாக அமையும் என்பதை மேலை நாட்டு அரசியல் பார்வையாளர்கள் ஒப்பியிருக்கின்றனராம்!

கொழும்பு சமாதான மாநாடு

பாகிஸ்தான் பிரதிநிதிகள் கலந்துகொள்ளத் தடை

காராச்சி, ஜூன் 14—

கொழும்பு நகரில் நடைபெறும் 72 நாடுகள் சமாதான மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்று இரண்டு பெரிய அரசியல் தலைவர்களை பாகிஸ்தான் சர்க்கார் தடுத்துவிட்டதாம்.

இவர்கள் இருவரும் பாகிஸ்தானிலிருந்து மாநாட்டிற்குச் செல்லவிருந்த 11 பேரடங்கிய தூதுக்குழுவில் உறுப்பினர்களாவர்.

கம்யூனிஸ்டுகள் நடத்துகிறசமாதான காங்கிரஸ், மற்றும் மாநாடுகளுக்கு எந்தவித பாகிஸ்தானியும் போகக்கூடாது என்ற சர்க்காரின் புதிய கொள்கையினலேயே இவர்கள் கொழும்பு செல்லாமல் தடுக்கப்பட்டார்களாம்.

முகம்மதலி ஹக் உஸ்மானி என்ற அவாமி லீக் கோஷ்டியைச் சேர்ந்தவரும், அப்துல் கயூம் என்ற குடியரசுக் கட்சி முன்னள் செயலாளரும்தான் தடுக்கப்பட்டவர்களாவர்.

'மராத்திப் பகுதிகளைப் பம்பாய்க்குத் தந்துவிடுக'

மைசூர் சட்டசபையில் கோரிக்கை

பெங்களூர், ஜூன் 14—

"பெல்காம், மற்றும் கார்வார் மாவட்டங்களிலுள்ள மராத்தி பேசும் பகுதிகளை பம்பாய்க்குத் தந்துவிட வேண்டும்,"

என்று, பி. ஆர். சுந்தன்கார் என்ற பெல்காமிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சம்யுக்த மராட்டிய சமிதி உறுப்பினர், மைசூர் சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த யோசனையை எல்லா உறுப்பினர்களும் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்றும், மராத்தி பேசும் பகுதிகளை பம்பாய்க்குத் தந்துவிட்டு, ஷோலாப்பூர் மற்றும் சதாரா மாவட்டங்களில் உள்ள கன்னடம் வழங்கும் பகுதிகளைப் பெற மைசூர் மாநிலம் முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டின் கதி என்ன?

ஒத்திவைக்க யோசனை கூறுகிறது 'டைம்ஸ்' இதழ்

இலங்கை முதலிய நான்கு நாட்டு பிரதமர்கள் வரப்போவதில்லையாம்!

லண்டன், ஜூன் 13—

"ஜூன் 26-ந் தேதி துவங்க இருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டினை ஒத்தி வைக்க வேண்டும்,"

என்று, லண்டன் 'டைம்ஸ்' இதழ் தனது தலையங்கத்தில் கூறியிருக்கிறதாகத் தெரிகிறது.

"நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கப் பிரதமர்கள் மாநாட்டிற்கு வரப்போவதில்லை; இலங்கைப் பிரதமர் வருவதும் நிச்சயமில்லை; அதுபோலவே கனடா நாட்டுப் பிரதமரும் வரப்போவதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், பல பிரதமர்கள் வராத காரணத்தால், மாநாட்டினை ஒத்திவைப்பதே நல்லது,"

என்றும் 'டைம்ஸ்' இதழ் குறிப்பிட்டுள்ளதாம்.

"இத்தனை பேர் வராததால், மாநாட்டின் கௌரவமும் முக்கியத்துவமும் குறையும்; எதிர்காலத்தில் காமன்வெல்த் பிரதமர்கள், மாநாட்டிற்கான அழைப்பை ஏற்பதில் சோர்வுறக்கூடும்,"

என்றும், அந்த இதழ் கூறியிருக்கிறதாம்.

இந்தியாவில் மீண்டும் பதிவாக வேண்டுமாம்!

புதுவையில் பதிவு செய்யப்பட்டு, பிறகு இந்தியாவில் விற்கப்படும் கார்கள் மீண்டும் இந்தியாவில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று புதுவை சுங்க இலாகா கலெக்டர் தெரிவித்துள்ளார்.

ஆயிரம் மகளிர் ஆர்ப்பாட்டம்

போலீசார் தலையிட்டனர்

கேப்டவுன், ஜூன் 13—

தென்னாப்பிரிக்காவில், ஆண்கள் தாங்கள் செல்லுமிடங்களுக்கு பிரயாண அனுமதிச் சீட்டை எடுத்துச் செல்லவேண்டும் என்ற சட்டம் அமுலில் உள்ளது. இந்தச் சட்டத்தை பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதைக் கண்டித்து சுமார் 1,000 பெண்கள் தெருக்களில் அணிவகுத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்த விளம்பர அட்டைகளையும், கொடிகளையும் போலீசார் கைப்பற்றினர். அதன் பின்னரும் அவர்கள் ஊர்வலத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

உணவுப்பொருள் விலை வீழ்ச்சியை சர்க்கார் அனுமதிக்காதாம்

உணவு மற்றும் விவசாயப் பொருள்களின் விலை வீழ்ச்சியை சர்க்கார் அனுமதிக்காது என்றும், அவ்வப்போது இதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்றும் டெல்லி சர்க்கார் விவசாயிகளுக்கு உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள்.

விலைவாசிகள் ஏறி இருக்கும் இந்த நேரத்தில் நிர்ணயம் தேவை இல்லை என்றும், பண்டிதர் தெரிவித்த கருத்தை ஒட்டி சர்க்காரும் உறுதிமொழி கூறியிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—6—57 சனி

ஐந்தாம் ஆண்டில் நாம்

'நம் நாடு'—நான்கு ஆண்டுகள் இடையறுந்து போகாமல், துவழாமல், பணியாற்றிவிட்டு, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்ற செய்தி கண்டு தென்னவர், தமிழர், கழகத் தோழர்கள் நாம் எல்லாம் பெருமையும் பூரிப்பும் அடைவதில் நியாயம் மிக உண்டு.

'நம் நாடு' இதழின் பிறப்பையும், வளர்ச்சியையும் அறிந்தவர்களுக்கு அந்த நியாயம் தெளிவானது.

'நம் நாடு' கையகல ஏடு தான், எனினும் எமக்கென்று நாம் கொண்டுள்ள ஏடு, கழக ஏடு என்பதில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் படைவரிசையினர் பெருமை கொண்டாடுகின்றனர்.

'நம் நாடு' கடந்த நான்கு ஆண்டுகளாக ஆற்றிவந்துள்ள பணியின் அளவும் தரமும், அதனைக் காண்பதற்காக, கஷ்ட நஷ்டங்கள் பலவற்றை அனுபவித்த உத்தமர்களுக்குத்தான் மதிப்பிடக்கூடியன என்பதல்ல; மாற்றாரும் உணரக்கூடியதே.

'நம் நாடு' கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடாகப் பணியாற்றிவருவதால், கழகத்தின் வளர்ச்சிக்கு உதவுவதில் அது பற்றியுள்ள பங்கும், ஏற்றுள்ள பொறுப்பும் மகத்தானவையாகும்.

'நம் நாடு' கடந்த நான்கு ஆண்டுகளிலும் தன்மீது சுமத்தப்பட்ட மிகப் பெரும் பொறுப்பை பலரும் பாராட்டத்தகும் வண்ணம் நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதைத் தன்னடக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

'நம் நாடு' கழக நடவடிக்கைகளைப் பறைசாற்றுவதில் மட்டுமின்றி, தென்னகத்தின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நல்லோரின் கருத்துக்களைப் பிரதானப்படுத்துவதிலும் கூட பாரபட்சம் காட்டாது, நடுநிலை பிறழாது, விருப்பு - வெறுப்புகளுக்குத் துளியும் இடமின்றி நடந்து கொண்டிருப்பதை நேர்மையாளர்கள் நாம் கூறாமலேயே தெரிந்துகொள்வர்.

'நம் நாடு' நாட்டில் அலையென அடுக்கடுக்காகத் தோன்றும் பிரச்சினைகள் அனைத்தையும் அலசிக் காட்டிவிட்டது என்றுகூறி பெருமைதேட நினைக்கவில்லை.

'நம் நாடு' நாட்டில் தோன்றும் பிரச்சினைகளில் பிரதானமானவற்றை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டி இருக்கிறது; அவற்றின் தன்மையை தன் சிற்றறிவுக்கு எட்டிய மட்டும் எடுத்துரைத்திருக்கிறது. அந்தப் பிரச்சினைகளுக்கான பரிகாரத்தை, அச்சமின்றி துணிவோடு எடுத்துரைத்திருக்கிறது. சுருங்கக் கூறின், தென்னாட்டு மக்களுக்கு அரசியல் தெளிவூட்டவும், தங்கள் வாழ்வைப் பற்றிய பிரச்சினைகளை ஆராயவேண்டிய அடிப்படை நோக்கு என்ன, சிந்தனை வழி என்ன என்பதை எத்தனையோ எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்து, இடையூறுகள் கண்டு கலங்காமல், தெளிவாகத் திட்டவட்டமாகப் பறைசாற்றி வந்திருக்கிறது.

'நம் நாடு' நம்மை, திராவிடரை வாழவிடாது தடுக்கும் தீயசக்திகள் எவை என்பதையும், அந்தச் சக்திகள் காலப்போக்கில் மேற்கொள்ளும் பல நிறத் தோற்றங்களையும் உருவங்களையும் தனது விளக்கம் எனும் வெளிச்சத்தில் நிறுத்திக்காட்டி, தென்னக மக்களை அந்தத் தீயசக்திகளுக்கெதிராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் திரண்டு, போராடுவதற்குத் தயாரிக்கும் பணியைச் செம்மையாகச் செய்துவருகிறது.

'நம் நாடு' திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல் மிகுந்த போர்க்கருவிகளுள் ஒன்றாகவும் இருந்துவருகிறது; கழகத்தின் மீது மாற்றார் தொடுக்கும் கணைகளை முறிக்கவும், வாரி எறியும் பழியைத் துடைக்கவும் எழிலும் கவர்ச்சியும் பெற்றில்லாவிடினும், திறமும் உரமும் கொண்ட ஆயுதமாக விளங்கி வருகிறது என்பதில் சந்தேகம் என்ன? கழகம் 'நம் நாடு' மூலம் விடுத்த அறைகூவல்களுக்கு பதிலளிக்கும் துணிவுபெற்ற 'அகில இந்திய' வட்டாரங்கள் இன்றளவும் இல்லை என்பதும் 'நம் நாடு' பெருமைப்படுத்தற்குரிய அம்சம் அல்லவா?

'நம் நாடு', சட்டசபையில் இடம் என்ற புதியதோர் பொறுப்புமிகுந்த அந்தஸ்தினை கழகம் பெறுவதற்கு, பதினேழு இலட்சம் வாக்காளர்களை, கழகத்தின்பால் ஈர்ப்பதற்கு, ஆற்றிய பணி, சாமானியமானது அல்லவே!

'நம் நாடு' — கழகத்தின் நடவடிக்கைகளை, கழக முன்னணி வீரர்களின் இந்த நாட்டுக்கு வழிகாட்டும் கருத்துரைகளை இருட்டடிப்புச் செய்வதின் மூலமே, கழக வளர்ச்சியில் வெந்நீர் ஊற்றிவிடலாம் என்று கனவு கண்டவர்களுக்கு நிரந்தர அறைகூவலாக அல்லவா நிமிர்ந்த நெஞ்சுடன் நிற்கிறது?

'நம் நாடு' இன்றும், கழகத்தின் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு மிகுந்த நடவடிக்கைகளையும், முன்னணி வீரர்களின் ஆய்வுரைகளையும் திரித்தும், கூட்டியும், குறைத்தும் நிர்ப்பந்தம் காரணமாக வெளியிட்டுக்கொண்டிருக்கும் தினத்தாள்களின் அபாயகரமான போக்கிலிருந்து கழகத்திற்குப் பாதுகாப்புத் தரும் உற்ற துணைவனாகவும் விளங்கி வருகிறது.

'நம் நாடு' கழக வளர்ச்சியின் வேகத்தை மிகுவிப்பதிலும், கழக இலட்சியத்தையும் கொள்கைகளையும் விளக்குவதிலும், கழகத்திற்குப் பாதுகாப்பளிப்பதிலும், கண்ணுங் கருத்துமாயிருந்து ஆற்றிவரும் சீரிய தொண்டு கழகத் தோழர்கள் அனைவருக்கும் மனநிறைவும், ஊக்கமும், உற்சாகமும் தரும் வல்லமை பெற்றதாகும்.

'நம் நாடு' இந்த நன்றிக்குறிய தொண்டினை, உரிய முறையில் நிறைவேற்றி வருவதற்குத் துணைபுரியும் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறது, இந்த நேரத்தில்.

'நம் நாடு' கழகத் தோழர்களுடையவும், நாட்டு மக்களுடையவும் பேராதரவை இந்த நான்காண்டுக்காலமாகப் பெற்று வருகிறது; என்றாலும், அந்த ஆதரவு 'நம் நாடு' மேற்கொண்டிருக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பதையும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியவர்களாயிருக்கிறோம். கழகத் தோழர்கள் 'நம் நாடு' வளருவதிலும், ஏற்றம் பெறுவதிலும் தான், கழக வளர்ச்சியிருக்கிறது என்ற உண்மையை இன்னும் நன்றாக உணர்ந்து 'நம் நாடு' மேலும் வளர உரம் ஊட்டவேண்டும் என்பதையும் பணிவன்புடன் நினைவூட்டுகிறோம்.

'நம் நாடு' இல்லந்தோறும் இடம்பெறச் செய்வதில்தான், கழகமும் நல்லவர் உள்ளந்தோறும் இடம்பெறும் வேகம் இருக்கிறது என்பதை நாம் சொல்லவா வேண்டும்?

'நம் நாடு' வாழ, வளர, மேலும் சிறப்பான விரிவான தொண்டாற்ற நாட்டவருடையவும், கழகத் தோழர்களுடையவும் தொடர்ந்த நல்லாதரவையும் உளம்கனிந்த வாழ்த்துக்களையும் இந்த ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நேரத்தில் பெரிதும் எதிர்பார்க்கிறது.

மனித வேட்டையை நிறுத்தமாட்டார்களாம்!

தனி நாடு கோருவது முட்டாள் தனமானதாம்!

நாகர் கிளர்ச்சி பற்றி அசாம் முதன்மந்திரி

ஷில்லாங், ஜுன் 12—

"நாகர் தலைவரான பிசோவும் அவரது சகாக்களும் பலாத்காரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்தும்வரை அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை.

"நாகமலைத் தொல்லைகளுக்கெல்லாம் காரணம், 'நாகர்களுக்குச் சுதந்திர நாடு வேண்டும்' என்ற முட்டாள் தனமான கோரிக்கையும், அந்த அடிப்படையில் அல்லாது வேறெந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தவும் நாகர் தலைவர் பிசோ மறுத்துவருவதும்தான்!

என்று, சர்க்காரின் நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசுகையில், முதன் மந்திரி பிஷ்ணுராம் மெஹ்தி அசாம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

"தங்கள் ஆயுதங்களுடன் உடனடியாகச் சரணடைகிறவர்களை எல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ளவும், மன்னிக்கவும் தயாராகவே இருக்கிறோம்" என்றும் அவர் கூறினாராம்.

புரட்சி கம்யூனிஸ்டு உறுப்பினரான சாகன் பார்பரா என்பவர் பேசுகையில், 'சர்க்கார் உடனடியாக இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்; பொது மன்னிப்புப் பிரகடனப்படுத்த வேண்டும்; எல்லா அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் அடங்கிய மாநாடு கூட்டி அதில் நாகர் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டும்' என்று யோசனை கூறியிருக்கிறார்.

★

நாகர்களை வேட்டையாடுவதற்கு டில்லி நிதி உதவச் சம்மதம்!

அசாம் மாநில நிதிமந்திரி அறிவிப்பு

ஷில்லாங், ஜுன் 12—

"நாகர் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக நாம் செலவிடும் பெருந்தொகை முழுவதையும் நமது மாநில கஜானாவிலிருந்து செலவிடமுடியாது; அதற்கு நமது கஜானா இடம் தராது; இந்தக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகும் செலவினை பெரும்பாலும் மத்திய சர்க்காரே ஏற்றுக்கொண்டாகவேண்டும்.

"இந்த விஷயம் குறித்து நிதி கமிஷனிடமும் நாம் முறையிட்டிருக்கிறோம்; மத்திய சர்க்காரையும் நிதி உதவி செய்யுமாறு வேண்டியிருக்கிறோம்.

"விசேஷ நிதி உதவி செய்வதாக மத்திய சர்க்காரும் கூறியுள்ளனர். ஆனால் இன்னும் திட்டவட்டமாக அந்த உதவியின் அளவு குறித்து அறிவிக்கப்படவில்லை. நிலைமையின் அவசரத்தை உணர்ந்து மத்திய சர்க்கார் தாங்கள் தந்துள்ள உறுதிமொழிப்படி உடனடியாக உதவி தருவார்கள் என்றே நம்புகிறோம்"

என்பதாக, அசாம் நிதி மந்திரி சட்டசபையில் வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்து பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

டுனீஷியாவில் பிரெஞ்சு இராணுவத்தினர் வாலாட்டம்

'நிலைமை நீடித்தால் யுத்தம் மூளும்' எனப் பிரதமர் எச்சரிக்கை

டுனீஷியா, ஜுன் 13—

"டுனீஷிய மண்ணில் இனியும் பிரெஞ்சுத் துருப்புகள் தங்கள் நடமாட்டத்தை நிறுத்திக்கொள்ள மறுப்பது ஒரு அபாயகரமான சூழ்நிலையையே உருவாக்குகிறது; டுனீஷிய சுதந்திரமும் அதிகாரமும் தொடர்ந்து அவமதிக்கப்பட்டால், இது ஒரு யுத்தம் என்ற அபாயகரமான நிலைக்குத் தவிர்க்க முடியாமல் இழுத்துச் செல்லும்; தங்கள்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டால், டுனீஷிய மக்கள் அந்த யுத்தத்தைச் சந்திக்கத் தயாராகவே இருக்கிறார்கள்"

என்று, டுனீஷியப் பிரதமர் ஹபீப்பர்கூபா எச்சரித்திருக்கிறார்.

"பிரெஞ்சுத் துருப்புகள் தொடர்ந்து, டுனீஷியத் துருப்புகளுடன் கைகலந்து கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும். சமீபத்திய சம்பவங்களுக்கு பிரெஞ்சு இராணுவமே முழுப் பொறுப்பாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இலவசக் கட்டாயக் கல்வி

பீகார் மாநிலத்தில் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 10,49,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 11 கோடி ஆதார கல்விக்கு செலவிடப்படுமாம்.

'மாநிலத்தில் எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதானல், ரூ. 54 கோடி தேவைப்படும்; என்று மாநிலத் துணை அமைச்சர் கூறியுள்ளார்.

உலகப் போரில்

ஒளிக் கதிர் பாய்ச்சியவர்கள்

ஆண்மைத் தன்மையை இழந்துவிட்டதாகத் தகவல்

நியூயார்க், ஜுன் 13—

கடந்த உலகப் போரில் எதிரிகளின் கண்களைப் பாதிக்கும் ஒளியைப் பயன்படுத்திய அமெரிக்க இராணுவத்தினர், இப்போது ஆண்மைத்தன்மையை இழந்துவிட்டதாகவும், மற்றும் ஒரு சிலர், கூனும் குருடுமாக உள்ள குழந்தைகளைப் பெற்றுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரான்ஸ் திருந்தியது!

பாரிஸ், ஜுன் 13—

பிரெஞ்சு கப்பல்கள் இனி சூயஸ் கால்வாய் வழியாகச் செல்லலாம் என்று பிரெஞ்சு அரசாங்கம் அறிவித்துள்ளது.

'எந்த வல்லரசுடனும் கூட்டு சேராது'

'கண்ணை மூடிக்கொண்டு நடுநிலைமையும் வகிக்காது'

சுதந்திரம் பெற்ற கணா நாடு குரலெழுப்புகிறது

"எந்த வல்லரசு நாடுகளுடனும் கனா கூட்டு சேராது; ஆனல் அதே நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டு நடுநிலைமையும் வகிக்காது"

என்று, கணாவின் தேசிய சட்டசபையில் நிதி அமைச்சர் கோமல் கடேமா தெரிவித்துள்ளார்.

உலகப் பிரச்சினைகளை காலத்திற்கு ஏற்றவாறு கனா அணுகும்; மேலும் உலக குழுக்களிலும், காமன்வெல்த்திலும், தன் கடமையை சரிவரச் செய்து முழு ஒத்துழைப்பையும் அளிக்கும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கேட்டீரா, சேதி!

சென்னை, ஜுன் 14—

தனது சர்வோதய இயக்கம் சம்பந்தமாக, விநோபாபாவே கடந்த 5 ஆண்டுகளாக மேற்கொண்ட பாத யாத்திரைக்காக ரூ. 5 கோடி செலவாகியுள்ளதாம்!

கடந்த 5 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சி பிரச்சாரத்திற்காக ரூ. 10 கோடி செலவிட்டுள்ளதாம்!

இந்தத் தகவலை சென்னை சைதையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வெளியிட்டதுடன், சோஷலிஸ்டுக் கட்சி கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 1 கோடிமட்டுமே செலவிட்டுள்ளதாக டாக்டர் லோகியா தெரிவித்துள்ளார்.

உணவு நிலை அபிவிருத்தி அடைந்து வருகிறதாம்!

டெல்லி அமைச்சரின் கூற்று

புதுடில்லி, சூன் 13—

தாங்கள் மேற்கோண்ட எண்ணற்ற நடவடிக்கைகளின் விளைவாக உணவுப் போருள் நிலைமை அபிவிருத்தி அடைந்து வருகிறது என்பதற்கான தேளிவான அறிகுறிகள் தேரிவதாக டெல்லி உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் பெருமைப்பட்டுக் கோண்டிருக்கிறார்.

பம்பாய், மற்றும் கல்கத்தாவில் கோதுமையின் விலை இறங்கு முகத்திலிருப்பதாகவும் அவர் ஆறுதல் பெற்றிருக்கிறார்.

அரிசி விலை ஏற்றம் பற்றி அவர் எதுவும் பத்திரிகையாளரிடத்தில் கூறியதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவிலிருந்து கோதுமை இறக்குமதிக்காக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறதாம், டெல்லி!

சென்ற ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக இந்தியாவிற்கு 35 இலட்சம் டன் கோதுமை கிடைக்குமாம்!

இந்த ஆண்டும், நீண்ட காலக் கடன் அடிப்படையில் கோதுமை பெற முயற்சித்து வருகிறார்களாம்!

சென்ற ஆண்டு அமெரிக்காவிலிருந்து இரண்டு இலட்சம் டன் அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டதாம்!

கேரளத்திற்கு 80,000 டன் அரிசி

கேரள சர்க்கார் வழங்கும்

சென்னை, சூன் 13—

சூன் திங்களிலிருந்து மூன்று மாத கால உபயோகத்திற்காக கேரள மாநிலத்திற்கு 80,000 டன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தர டில்லி சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே வந்துள்ள 3 ஆயிரம் டன் அரிசி போக, மேலும் 8 ஆயிரம் டன் அரிசியை (பர்மாவிலிருந்து இறக்குமதியானது) சென்னைக்குத் தரவும் டில்லி சம்மதித்திருக்கிறதாம்.

கேரள சர்க்கார் 1,25,000 டன் அரிசி வேண்டுமெனக் கேட்டிருந்தது; இதில் 80 ஆயிரம் டன் இப்போது ஒதுக்கப்படுகிறது; ஏற்கனவே 30,000 டன் கேரள மாநிலத்தில் டில்லி சர்க்கார் கிடங்குகளில் உள்ளது. இந்த இரண்டையும் சேர்த்தால் கேரளத்தின் தேவை சரியாகி விடும் என்று மத்திய சர்க்கார் கூறுவதாகத் தெரியவருகிறது.

கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத் துவக்க விழா

மு. கருணாநிதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்

சென்னை, சூன் 14—

நேற்று மாலை 6-30 மணிக்கு, சென்னை 4-வது வட்டம் சஞ்சீவிராயன் கோயில் தெரு கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத் துவக்க விழா தோழர்கள் சேதுராசன் முன்மொழிய, அன்பரசு வழிமொழிய தோழர் நே. எம். கண்ணபிரான் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வீதியின் இருமருங்கிலும் மக்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

தலைவர் தனது முன்னுரையில், கே. எஸ். பாண்டியன் சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து ஒரு சாதாரணத் தொண்டனாகவே பணியாற்றிவந்தார் என்றும், அரசியலில் மிகக் கண்ணியமாக நடந்துகொண்ட அவரை காங்கிரஸ்காரர்கள் கொலை செய்தார்களென்றும் கூறி, அவர் விட்டுச் சென்ற கொள்கையை நாம் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் தோழர்கள் தமிழழகன், வே. கபிலன், மு. அன்புராசன் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

பின்னர் தோழர் என். சீவரத்தினம் அவர்கள் பேசுகையில் நம்மை எதிர்ப்போர் என்றுமே நம்மை எதிர்ப்பவர்கள்தான் என்றும், ஆட்சியிலிருப்போர் தங்கள் நிலையை மறந்தும் - பொறுப்பை மறந்தும் நம்மை எதிர்க்கிறார்களென்றும், ஆனால் மக்கள் அவர்களுக்கு செவிசாய்க்கப் போவதில்லையென்றும், மற்றும் சட்டசபையில் காங்கிரசார் நடந்துகொள்ளும் முறையைப் பற்றியும் நகைச்சுவை ததும்பப் பேசினார்.

மேலும் அவர் பேசுகையில், "தேர்தல் காலங்களில் கம்யூனிஸ்டுகள், நாம் திராவிட நாடு பிரிவினையை கைவிட்டால்தான் தி. மு. கழகத்தை ஆதரிக்க முடியும் என்று கூறினார்கள்; ஆனால் இப்பொழுது 'புதிய வரிகளை எதிர்க்க ஒன்று சேர்ந்து போராடுவோம்' என்கிறார்கள். இப்பொழுதுமட்டும் தி. மு. கழகம் தனது திராவிட நாடு பிரிவினையை கைவிட்டுவிட்டதா? இல்லையே! ஆனால், அழைக்கிறார்கள். ஆனால் நாம் கேரள மந்திரி சபை ஏற்பட்ட நேரத்திலும், அவர்கள் செய்யும் நல்ல காரியங்களையும் பாராட்டுகிறோம். காரணம், நமக்கு அவர்களைப்போன்ற குறுகிய எண்ணம் கிடையாது" என்றும், 'வட நாடு—தென்னாடு என்ற உண்மையை விரைவில் அறியப்போகிறார்கள்,' என்பதையும் தெளிவுறுத்தினார்.

இறுதியாகப் பேசிய தோழர் மு. கருணாநிதி அவர்கள், பாண்டியன் போன்ற தியாக உள்ளம் கொண்ட கழக வீரர்களின் பட்டியலை மக்களிடம் விளக்கிக்காட்டினார். சென்று முடிந்த சட்டசபையில் காங்கிரசைத் தட்டிக் கேட்க ஆளின்றி, அவர்கள் 'தர்பார்' ஆட்சி நடத்தியதையும், சட்டசபையில் கழகப் பணிகளையும், கழகம் மக்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயார் என்பதையும், புது வரிக் கொடுமைகளையும் விளக்கிப் பேசினார்.

டெல்லிப் பாராளு மன்றத்தில் கழக உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பளிக்காததையும், அதற்கு சபைத் தலைவர் கூறிய மழுப்பல் பதிலையும் சுட்டிக் காட்டி அரியதோர் உரை நிகழ்த்தினார்.

தலைவர் முடிவுரையுடன், நன்றி நவில கூட்டம் முடிவுற்றது. தோழர் மு. கருணாநிதியவர்கட்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. (ந. - நி.)

முறை தவறாக தங்கம் தோண்டி எடுக்கப்படுகிறதாம்!

காட்மண்டு, சூன் 13—

"தலாய் லாமாவிடம் அதிகாரம் பெற்று, ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி சென்கோரா பகுதியில் தங்கம் தோண்டி எடுக்கப்படுவது சரிவர நடைபெறவில்லை" என்று சீன அரசாங்கம் இப்போது கண்டு பிடித்துள்ளது.

'முறை தவறாக - விஞ்ஞானத்திற்குப் புறம்பாக நஷ்டம் ஏற்படும் வகையில் தங்கம் தோண்டி எடுக்கும் வேலை நடைபெறுகிறது' என்று சீன அரசாங்கத்தின் அறிக்கை கூறுகிறது.

எனவே, இங்கு தனியார் மேற்பார்வையில் தங்கம் தோண்டி எடுப்பதை நிறுத்தியுள்ளனர்.

இங்குள்ள தங்கத்தைப்பற்றி 'துப்புறவு' நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திபேத்தில் சென்கோரா பகுதியில் கிடைக்கும் தங்கம் மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததென்று கூறப்படுகிறது.

நல்லெண்ணம் உதயம்

டில்லிஅமைச்சர்களின் ஊதியத்தில் 10 சத விகிதம் குறையும்

புதுடில்லி, சூன் 13—

மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள் தங்கள் ஊதியத்திலும் படிச் செலவுகளிலும் 10 சத விகிதம் குறைத்துக் கொள்ள தாமாகவே ஒப்புக்கொண்டுள்ளனராம்.

இதனால் ரூ. 1,10,000 ஆண்டு தோறும் மிச்சப்படுமாம்.

தற்போது பிரதமர் நேரு மாதம் ரூ. 2,250 ஊதியம் பெறுகிறார். இவருக்கு 'அலவன்ஸ்' என்பதற்கு மாறாக அவருடைய விருந்தினரின் முழுச் செலவை அரசாங்கம் ஏற்கிறதாம்.

மற்ற அமைச்சர்களின் ஊதியமும் மாதம் ரூ. 2,250; அன்றியும் ரூ. 500 'படி'ச் செலவாகத் தரப்படுகிறது.

துணை அமைச்சர்களுக்கு, மாதம் ரூ. 1,750 தரப்படுகிறது.

சிக்கனத்தைக் கையாண்டு, எளிய வாழ்க்கை நடத்தவேண்டும் என்று பண்டித நேரு அ. இ. கா. கமிட்டியில் கேட்டுக்கொண்ட பின்னர் இந்த முடிவுக்கு எல்லோரும் சம்மதித்தனராம்!

'உணவு விலைகள் அபாயகரமான அளவுக்கு ஏறியுள்ளன'

'ஐந்தாண்டுத் திட்டம் இதற்குப் புகலிடமாகக்கூடாது'

பண்டித குன்ஸ்ரூ எச்சரிக்கை

பூனா, சூன் 12—

"கடந்த 12 மாத காலத்தில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் அபாயகரமான அளவுக்கு ஏறியிருக்கிறது.

"தங்களது அத்தியாவசியத் தேவைகளின் விலைகள் இப்படி ஏறிக்கொண்டு போவதை நாங்கள் இனியும் சகிக்கமுடியாது என்று மக்கள் சர்க்காருக்கு அறிவுறுத்தவேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

"ஐந்தாண்டுத் திட்டமும், அபிவிருத்தித் திட்டங்களும் இந்த விலை ஏற்றத்திற்குப் புகலிடமாகக் கொள்ளப்படக்கூடாது; சர்க்கார் தொடர்ந்து பற்றாக்குறை நிதித் திட்டங்களில் ஈடுபடுவார்களேயானால், விலை ஏற்றத்திற்கு அவர்களே முழுப் பொறுப்பென மக்கள் குற்றஞ்சாட்டுவார்கள்"

என்று, பண்டித குன்ஸ்ரூ அவர்கள், பூனா நகர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

அரிய கண்டுபிடிப்பு

நிலக்கடலைத் தோல், நெல் உமி, வாழைப்பட்டை, கயிறு முதலிய சேதாரப் பொருள்களிலிருந்து 'இன்சுலேஷன்,' பொருள்களைத் தயாரிக்கலாம் என்று மத்திய உணவு டெக்னாலஜி ஆராய்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

குறைந்தபட்ச விலை நிர்ணயம்

உணவுப்பொருள்களுக்குத் தேவையில்லையாம்

மாநில முதல்வர்களுக்கு பண்டிதர் கடிதம்

புதுடில்லி, சூன் 13—

"விலைகள் வெகுவாக ஏறிக்கிடக்கும்போது, உணவுப் பொருள்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயிப்பதினால் எந்தவிதப் பலனும் இராது" என்று பண்டித நேரு, மாநில முதன் மந்திரிகளுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

'விலையைக் குறைவாக நிர்ணயித்துவிட்டால், உற்பத்தி ஊக்கம் குன்றக்கூடும்; விலையை அதிகமாக நிர்ணயித்துவிட்டால் பொருளாதார நிலைக்கு அது ஆபத்தாக முடியும்' என்றும் அவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

'உணவுப் பண்டங்களின் விலைகள் வீழ்வதைத் தடுக்க சர்க்கார், ஒரு விரிவான உறுதி மொழியைத் தந்தால் அதுவே போதும்' என்றும் பண்டிதர் கருத்தறிவித்திருக்கிறாராம்!

மரண தண்டனையை ரத்து செய்யும் மசோதா

மீண்டும் கோண்டுவரப்படுமாம்

கொழும்பு, சூன் 13—

இலங்கையில் மரண தண்டனையை ரத்து செய்யும் மசோதாவை மீண்டும் கொண்டுவர அரசாங்கம் விரும்புவதாக பாராளுமன்றத்தில் கவர்னர் - ஜெனரல் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது.

முன்பு ஒருமுறை இதே சட்டம் கொண்டு வரப்பட்டு மேல் சபை நிராகரித்ததின் காரணமாகக் கைவிடப்பட்டது.

(1-ம் கலத் தொடர்ச்சி)

தின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. புதிதாக அரசியலாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, அது பற்றிய தமது கருத்தை அறிக்கை வாயிலாக, ஆட்சியாளருக்கு சமர்ப்பிப்பதென்ற முடிவு எடுக்கப்பட்டது.

சூலை 2-ம் நாள் யூனியன் சார்பாக, மாபெரும் கூட்டம் ஒன்று நடத்துவதென்றும், அந்தக் கூட்டத்தில் புதிய தலைவரை பாராட்டவும், தங்களது குறைகளை பொது மக்களுக்கு எடுத்துரைக்கவும் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்கு நமது அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் இவர்களை அழைப்பதென்று, கையொலிகளுக்கிடையே, மகிழ்ச்சி ஆரவாரத்தின் மத்தியிலே முடிவாயிற்று. தலைவர் முடிவுரைக்குப் பின் செயல் வீரர் கண்ணனின் நன்றி அறிதலோடு கூட்டம் முடிவுற்றது. கூட்டமுடிவில் தேநீர் விருந்து ஒன்று நடைபெற்றது. (ந-நி.)

சர்க்கார் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம்

செயற்குழுக் கூட்டத்தில் புதிய தலைவருக்கு பாராட்டு

தொழிலாளர் கோரிக்கைகளுக்காகப் போராட தோழர் கி. மனோகரன் உறுதி

சென்னை, சூன் 14—

சென்னை மாநில தீவிர பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் தனது செயற்குழு கூட்டத்தை 9—6—57 ஞாயிறன்று மாலை, யூனியன் துணைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணன் அவர்களின் இல்லத்தில் நடத்திற்று, துணைத் தலைவர், புதிய தலைவர் கி. மனோகரன் அவர்களை, கூடியிருந்த 14 செயற்குழு உறுப்பினர்களுக்கு சம்பிரதாய முறைப்படி அறிமுகம் செய்து வைத்து, கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தும்படி மனோகரன் அவர்களைக் கேட்டுக்கொள்ள அவர் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில், கடந்த செயற்குழுவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை செயலாளர் பணிக்கர் படித்தார். தலைவர் தன்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்த பொதுக்குழுவுக்கும், செயற்குழுவிற்கும் நன்றிநவின்றார். யூனியனின் வளர்ச்சிக்காகவும், தொழிலாளர் தம் நலனுக்கும் பாடுபடுவதாக உறுதிமொழி தந்தார். பிறகு நடவடிக்கைகள் ஆரம்பமாயின. வந்திருந்தோர் அனைவரும் தொழிலாளர்கள் அனுபவித்துவரும் வேதனைகளை உருக்கத்தோடு எடுத்துக் கூறினார்கள். நியாயபூர்வமான தங்களது கோரிக்கைகளை, அரசாங்கம் உதாசீனம் செய்வதற்காகத் தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். டைரக்டர் அவர்கள் தொழிலாளர்களை மதித்து அனைத்துச் செல்ல வேண்டிய

(4-ம் கலம் பார்க்க)

'டில்லியின் புது வரிகள் ஏழை, எளிய மக்களை வெகுவாக பாதிக்கும்'

புது வரிகள் விதிக்காததற்கு அசாம் மந்திரி காட்டும் காரணம்

ஷில்லாங், சூன் 13—

அசாம் மாநில வரவு-செலவுத் திட்டம் சட்ட சபையில் தாக்கலாகியுள்ளது. அதில் ரூ. 4,60,00,000 பற்றாக்குறை காட்டப்பட்டிருக்கிறது.

இதனைச் சரிக்கட்ட எந்தப் புது வரியும் விதிக்க உத்தேசிக்கப்படவில்லை.

"மத்திய சர்க்கார் விதித்துள்ள வரிகள் நடுத்தர மக்களையும், ஏழை-எளியவர்களையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது என்ற காரணத்தினால்தான் நாங்கள் புது வரிவிதிப்பு பற்றி உத்தேசிக்கவில்லை,"

என்று, தேபேஷ்வர் சர்மா என்ற நிதிமந்திரி சட்டசபையில் கூறியிருக்கிறார்.

1957—58-ல் வருமானம் ரூ. 24,29,00,000 எனினும், செலவு ரூ. 28,90,00,000 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

'நேடோ' நாடுகளின் பலம் பற்றி வீராப்பு

ரஷ்ய இராணுவச் சாதனைகளை அழித்துவிட முடியுமாம்!

வாஷிங்டன், ஜுன் 13—

இன்னும் 5 ஆண்டுமுதல் 10 ஆண்டுகளுக்குள் தற்போது 'நேடோ' நாடுகள் வசம் உள்ள போர்ச் சாதனப் பலத்தைக் கொண்டு ரஷ்யாவின் எத்தகைய இராணுவச் சாதனையின் பலத்தையும் அழித்துவிட முடியும்" என்று 'நேடோ' இராணுவத்தின் தலைவர் நர்ஸாட் தெரிவித்துள்ளார்.

'நேடோ' நாடுகள் வசம் 150 விமானப் படைத் தளங்கள் உள்ளதாம். இதைக்கொண்டு, எதிர்பாராது ஏற்படும் திடீர்த் தாக்குதல்களைச் சமாளிக்க முடியுமாம்.

இந்த விமானத் தளங்களை ரஷ்யா தாக்க திட்டமிடுவதே ஒரு பெரியபிரச்சினையாக அமையுமாம். எல்லாத் தளங்களையும் ஒரே சமயத்தில் தாக்குவது முடியாதாம்.

மேலும் 'நேடோ' நாடுகள் வசம் உள்ள அணு ஆயுத பலத்தைக்கொண்டு எந்த இராணுவத் தளத்தையும் தாக்கி அழிக்க முடியுமாம்.

தனது சிங்கள வெறிக்கு நியாயம் தேடுகிறார் பண்டாரநாயகா

தேர்தல் காலத்திலேயே உறுதிமொழி தந்ததாகக் கூறுகிறார்

போராட்டத்தைக் கைவிடுமாறு மிரட்டுகிறார்

கொழும்பு, ஜுன் 13—

"தமிழரசுக் கட்சியினரும், தோழர் செல்வநாயகமும் தங்களது நான்கு அம்சக் கோரிக்கையை சர்க்கார் ஏற்காவிட்டால், ஆகஸ்டுத் திங்களில் 'சத்தியாக்கிரக' இயக்கம் நடத்தப்போவதாக அச்சுறுத்துகின்றனர். தங்களது நான்கு கோரிக்கைகளையும் ஒருசேர நிறைவேற்ற வேண்டும் என்றும், அதற்குக் குறைவான எந்த ஒரு பரிகாரமும் தனக்கும் தன் கட்சிக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று செல்வநாயகம் கூறுகிறார்.

"இலங்கையில் உள்ள வேறெந்தக் கட்சியோ அல்லது இந்த நாட்டின் எந்த ஒரு சர்க்காருமோ பெடரல் கட்சியின் கோரிக்கைகளை ஏற்கும் என்று நான் கருதவில்லை.

"அவர்கள், தங்கள் போராட்டம் பலாத்காரமற்றதாகவும் அமைதியானதாகவும் இருக்கும் என்கிறார்கள்; ஆனால், இயக்கம் ஆரம்பித்த உடனேயே பலாத்காரம் தலைதூக்கும்—நாடு முழுவதும் பரவும்—அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதிக்கும் சொல்லொணாத் துயரத்திற்கும் ஆளாவர்; எனவே, நான் மீண்டும் வேண்டுகிறேன் தமிழரசுக் கட்சியினரை—நாட்டினை பத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்தாதீர்கள், உங்களது உத்தேசப் போராட்டத்தினால்!"

என்று, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், 'சிறுபான்மையினரின் குறைகளைப் போக்குவதற்காக நியாயமான நடவடிக்கைகள் பற்றி ஏற்கனவே அறிவித்திருக்கிறேன். நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்கும் வகையில் 'பிரதேசக் கவுன்சில்'கள் அமைப்பது, எல்லோருக்கும் அடிப்படை உரிமைகள் கிடைக்கும்வண்ணம் அரசியல் சட்டத்தைத் திருத்துவது, தமிழ் மொழியை நியாயமான அளவு உபயோகிப்பது என்பவை நான் கூறும் திட்டங்களாகும்; இவை குறித்துப் பரிசீலிக்காமலேயே நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்துவது தண்டனைக்குரிய முட்டாள்தனமாகும்,' என்றும் பசப்பி, எச்சரித்திருக்கிறார்.

"தேர்தல் காலத்திலேயே நாங்கள், 'சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவோம்,' என்றுதான் உறுதிமொழி தந்தோம்; வெற்றி பெற்றதும், அந்த உறுதிமொழியை நிறைவேற்றினோம்; அவ்வளவுதான். அன்று, 'தமிழுக்கும் இடம் தருவோம்,' என்றுதான் கூறினோம். அதன்படி இன்று தமிழை நியாயமான அளவு உபயோகித்துக் கொள்ளவும் முயற்சிப்போம் என்கிறோம்" என்றும் கூறி, தனது சிங்கள வெறிக்கு நியாயம் கற்பிக்கவும் அவர் முயன்றிருக்கிறார்.

சென்னை — பகுத்தறிவுப் பாசறை முதலாண்டுவிழா

16—6—57 மாலை 6-மணிக்கு பகுத்தறிவுப் பாசறை நூல் நிலைய முதலாண்டு விழா, சென்னை—பைராஜ் ஜெகம்பதூர் தெருவில் ('மிட்லண்ட்' திரையரங்கின் எதிரில்) தோழர் நா. இராசா தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் மு. கருணாநிதி, க. அறிவழகன், த. ந. சம்பந்தம், என். கிருட்டினன் ஆகியோர் உரையாற்றுவர். அன்று பகல் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும்.

தொழிலாளர் சங்க ஆண்டுவிழாவில் அண்ணா

17—6—57 மாலை 5-மணிக்கு சென்னை—வண்ணை பென்ஷனர் வீதித் திடலில் (தங்கசாலை பஸ் நிலையம் அருகில்) 'தி ஜெனரல் அண்டு இண்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் யூனியன்' 13-வது ஆண்டுவிழாவும்—மாநாடும் வழக்கறிஞர் திரு கே. எஸ். ஷெட்டி தலைமையில் நடைபெறும்; அதுபோது அண்ணா அவர்களும் தோழர்கள் பி. எம். சுவாமிராசு, எஸ். மகாதேவன், சி. ஆர். பாலசுந்தரம், ஆர். ஆர். சந்திரன் ஆகியவர்களும் சிறப்புரையாற்றுவர். தோழர்கள் டி. ஆர். கண்ணன் வரவேற்புரையும், வி. ஜி. இராமசாமி கொடியேற்ற விழாவும், ஏ. வி. குமார் திறப்புரையும் ஆற்றுவர்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல்

"நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தலும், நெல்லை மாவட்டத்தில் காலியாகவுள்ள பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தலும் 23—6—57 ஞாயிறன்று காலை 10-30 மணிக்கு தூத்துக்குடியில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்,"

என நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் டபிள்யூ. டி. துரைசாமி அவர்கள் அறிவிக்கிறார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

ஜுன்

16: காலை—விழுப்புரம்; மாலை—கோயில்கண்ணாப்பூர்

17: சிறுகூடல் (திருச்சி மாவட்டம்)

18: ஆனந்தவாடி (உடையார்பாளையம் வட்டம்)

20: செங்குன்றம் (செங்கற்பட்டு மாவட்டம்)

23: தூத்துக்குடி; காலை—நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தேர்தல்; மாலை—தாளமுத்து அனுதாபக் கூட்டம்

25: காலை—நாச்சிப்பட்டு; மாலை—வெண்ணந்தூர்

மைசூர் கல்வி இலாகா நடத்தும் எல்லாப் பரீட்சைகளையும் கவனித்துக்கொள்ள ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தப்படும் என்று அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

தென்காசி: இலசபதி திடலில் 17—6—57 இரவு 8 மணிக்கு

பேசுவோர்: ப. உ. சண்முகம் எம். எல். ஏ., ஆ. திராவிடமணி, தே. சு. பன்னீர்செல்வம், அ. மீயான்

★

வேடசந்தூர்: (மதுரை மாவட்டம்) மாரியம்மன் கோவில் அருகில் 18—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர்: மு. காதர்சா

பேசுவோர்: சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., பி. சமதர்மம், இரா. இராமலிங்கம், வி. முத்துசாமி

(அன்று மாலை 4-30 மணிக்கு லெட்சுமணன்பட்டியிலும், மாலை 5-மணிக்கு பூத்தாம்பட்டியிலும் தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கள் கொடியேற்றுவித்து உரை நிகழ்த்துவார்.)

★

கீழவளவு—மலம்பட்டி: (மேலூர் வட்டம்) வள்ளுவர் திடல் 19—6—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: ஏ. வேலுச்சாமி

பேசுவோர்: சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., மதுரை எஸ். முத்து, பி. சமதர்மம், மு. க. இளமொழி

திண்டுக்கல்—நாகல் நகர் புதூர் உதயசூரியன் படிப்பகத் திறப்பு விழா

16—6—57 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பகத் திறப்பு விழா தோழர் என். முத்து அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர் டி. கே. சீனிவாசன் படிப்பகத்தை திறந்து வைத்துப் பேருரை நிகழ்த்துவார்.

குடந்தை உதயசூரியன் இலவசம் படிப்பகப் பொதுக் கூட்டம்

16—6—57 மாலை 6 மணிக்கு மேற்படிப் பொதுக் கூட்டம் பிச்சை பிராமணத் தெருவில் தோழர் ஜி. செயராமன் தலைமையில் நடைபெறும்; தோழர் வி. சின்னத்தம்பி கொடியேற்றி வைப்பார்; தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்கள் சிறப்புரையாற்றுவார். தோழர் ஜி. சித்தாராமன் நன்றியுரையாற்றுவார்.

சென்னை—குயப்பேட்டை மக்கள் முன்னேற்ற மன்ற ஆண்டுவிழா

17—6—57 மாலை 6-மணிக்கு சென்னை—24-வது வட்டம் குயப்பேட்டை அருணாசலப் பண்டாரம் தெருவில், மேற்படி மன்ற 2-ம் ஆண்டுவிழா தோழர் ஆர். ஜார்ஜ் தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., தோழர்கள் ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

விஷக் காய்ச்சலுக்குக் காரணம்

அணு ஆயுதச் சோதனை வெடிப்புகளே!

★

சளிக் காய்ச்சல் பிடிக்கப்பட்டோர்

தமிழ்நாட்டிலேயே அதிகம்

புதுடில்லி, ஜுன் 15—

இம்மாதம் 11-ந் தேதி வரையில் நாட்டின் முக்கிய நகரங்களிலும் 1,42,198 பேர் சளிக் காய்ச்சலால் (இன்புளுயன்சா) பாதிக்கப்பட்டனர் என்றும், இவர்களில் 110 பேர் இயற்கை யெய்தினதாயும், புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது; மாநிலவாரியாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது:—

சென்னை: 49,097 — இறந்தோர் 14; கேரளம்: 1,200; மைசூர் (பெங்களூர் உள்பட): 1,200; பம்பாய்: 31,410—இறந்தோர் 48; மேற்கு வங்கம் (கல்கத்தா உள்பட): 4,783—இறந்தோர் 37; ஐதராபாத்: 137; புதுவை: 1,021; அந்தமான், நிகோபார் தீவுகள்: 1; உத்திரப்பிரதேசம்: 447; இராஜஸ்தான்: 70—இறந்தோர் 5; பஞ்சாப்: 591; மத்தியப் பிரதேசம்: 53—இறந்தோர் 2; ஆமதாபாத் 24; பூனா: 13,468—இறந்தோர் 4; கான்பூர்: 11.

டில்லி அத்தேதி வரையில் 36,695 பேர் என்றும், மறுநாள் மேலும் 6,196 பேரை அது பிடித்தது என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இப்போது இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளை வாட்டிவரும் இன்புளுயன்சா என்ற விஷக் காய்ச்சலுக்கு, பசிபிக்கிலும், சைபீரியாவிலும் நடைபெறும் அணு ஆயுதச் சோதனை வெடிப்புகளே காரணமாயிருக்கலாம் என்று 'லான்செட்' என்ற மருத்துவ இதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தத் தொத்து நோய் ஐரோப்பா முழுவதும் பரவக்கூடும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

"இன்புளுயன்சா காய்ச்சல் ஒரு புதுரகக் கிருமிகளால் ஏற்படுகிறது. கதிரியக்கத்தினால் இந்த கிருமிகள் மாறுதல் அடைகின்றன. கிருமிகள் எவ்வளவு மாறுதல் அடைகின்றனவோ அவ்வளவுக்கு அவை ஆபத்தானவை"

என்று, பிரிட்டனில் உள்ள கிருமி ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் நாரிமன் பைரி தெரிவித்துள்ளார்.

தாளமுத்து கொலை வழக்கு எதிரொலி

தங்கப்பழம் மற்றும் பிரபல கம்யூனிஸ்டுகள் கைது

தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர் தாளமுத்து கொலை சம்பந்தமாக ஆர். எஸ். தங்கப்பழம், பெருமாள் நாடார், சுடலை முத்து, சந்தனராஜ் (இருவரும் பிரபல கம்யூனிஸ்டுகள்) வி. என். இராசகோபாலன் ஆகியோர் இ. பி. கோ. 151-வது பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு சப்-மாஜிஸ்திரேட் பட்டாபிராமன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டனர்.

தங்கப்பழம், பெருமாள் நாடார் இருவரும் நாள்தோறும் திருச்சி சப்-மாஜிஸ்திரேட் முன்னரும், சுடலைமுத்து, சந்தனராஜ் ஆகிய இருவரும் திருநெல்வேலி போலீஸ் நிலையத்திலும், இராசகோபாலன் தூத்துக்குடி போலீஸ் நிலையத்திலும் நாள்தோறும் ஆஜராக வேண்டுமென்றும் பணித்து அவர்களை விடுதலை செய்துள்ளார்.

தங்கப்பழமும், பெருமாள் நாடாரும், தூத்துக்குடி கே. வி. கே. சாமி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களாகும்.

சுடலைமுத்து நகர கம்யூனிஸ்டு பிரமுகராவர், நகரசபை உறுப்பினருமாவார்.

சந்தனராஜ் சங்கு குளிப்போர் சங்கத்தின் துணைச் செயலாளரும் நகர கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்தவருமாவார்.

இராசகோபாலன் ஆர்வி ஆலையில் குமாஸ்தா வேலை செய்பவர் என்று தெரியவருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 6/57

கழகத் தோழர்களுக்கு

★

சென்னை நகரிலும், பிற மாவட்டங்களிலும் விஷக்காய்ச்சல் நோய் பெருவாரியாகப் பரவிப் பலரையும் பாதித்துக்கொண்டு வருவதால், இன்னும் ஒரு திங்களுக்கு, முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் தவிர, மற்ற கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டாம் என்றும், நோய் பரவவொட்டாமல் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

12—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தில்லை-வில்லாளன் நிகழ்ச்சிகள்

ஜுன் 16: அரசூர் (திருமணம்)
23: குரவப்புலம்
30: பந்தநல்லூர் காலை—திருமணம்; மாலை—பொதுக்கூட்டம்
ஜுலை 1: பெண்ணாடம் (திருமணம்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.